செ.வெ.எண்: 36 நாள்: 22.09.2020

**பெரம்பலூர் மாவட்டம்**

**பொதுமக்களின் அவசர மருத்துவ சேவைக்காக இரண்டு 108 ஆம்புலன்ஸ் வாகன சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தமிழக அரசின் சார்பில் பொதுமக்களின் அவசர மருத்துவ சேவைக்காக துங்கபுரம் மற்றும் காரை ஆகிய 2 அரசு மருத்துவமனைகளுக்கு 108 ஆம்புலன்ஸ் வாகன சேவையினை பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் இன்று (22.09.2020) மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் தொடங்கி வைத்து தெரிவிக்கையில்:

தமிழக அரசின் சார்பில் பெரம்பலூர் மாவட்டத்திற்கு பொதுமக்களின் மருத்துவ சேவை மற்றும் அவசர தேவையினை கருத்தில் கொண்டு ஏற்கனவே 13 வாகனங்கள் வழங்கப்பட்டு அவை பெரம்பலூர் ஒன்றியத்தில் பெரம்பலூர் - வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பெரம்பலூர் - தலைமை மருத்துவமனை, பெரம்பலூர் - பச்சிளம் குழந்தை வாகனம், அம்மாபாளையம், சிறுவாச்சூர் ஆகிய இடங்களிலும், குன்னம் ஒன்றியத்தில் குன்னம், வேப்பூர் - அரசு மருத்துவமனை, பாடாலூர், லப்பைகுடிக்காடு ஆகிய இடங்களிலும் வேப்பந்தட்டை ஒன்றியத்தில் வேப்பந்தட்டை, அரும்பாவூர், கை-களத்தூர், வாலிகண்டபுரம் ஆகிய இடங்களில் நல்ல நிலையில் இயக்கப்பட்டு, மருத்துவ தேவையினை பூர்த்தி செய்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்போதைய கொரோனா தடுப்பு நடவடிக்கயைாகவும் கொரோனா வைரஸ் பாதித்தவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்திடும் பொருட்டு கூடுதலான வாகனங்களை அனைத்து மாவட்டத்திற்கும் வழங்கினார்கள்.

அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்திற்கு இரண்டு 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டு உள்ளன. வாகனத்தில் அவசர சிகச்சை பிரிவிற்கு தேவையான அனைத்து மருத்துவ உபகரணங்களான ALS (ADVANCE LIFE SUPPORT) செயற்கை சுவாச கருவிகள் வெண்டிலேட்டர், BLb(ஆக்ஸிஸன் வசதிகள்)ஆகிய அனைத்து வசதிகள் கொண்ட வாகனமும் மற்றொன்று பச்சிளம் குழந்தைகளுக்கான Neonatal சிறப்பு வாகனமும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களுக்கு தேவையான உயர்தரமான மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர்(சுகாதார பணிகள்) மரு.கீதாராணி, பெரம்பலூர் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் மரு.ராஜா, பெரம்பலூர் மாவட்ட 108 ஆம்புலன்ஸ் மேலாளர் திரு.அறிவுக்கரசு, 108 மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.அருள்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**